IASC

Inter-Agency
Standing Committee Country Team
Colombo Sri Lanka

# சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்லுதல்

இடம்பெயர்ந்த மக்களில் பலர் தத்தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல விரும்புகின்றனர். அவ்வாறு நீங்கள் திரும்பிச் செல்வதாயின் அது பாதுகாப்பானதா எனவும் உங்கள் சொந்த இடங்களில் மீண்டும் கௌரவமான வாழ்க்கையை ஆரம்பிக்க முடியுமா என்பது பற்றியும் தெரிந்து கொள்வது மிகவும் முக்கியம்.

**சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்வதா அல்லது தொடர்ந்து இங்கு தங்கியிருப்பதா என நீங்கள் உங்கள் விருப்பத்திற்கமைய தெரிவு செய்யலாம். எவ்வாறு இந்தத் தெரிவினை நீங்கள் செய்யக்கூடியதாக இருக்கும்?**

- திரும்பிச் செல்வதா? இல்லையா? என்பதும், எப்பொழுது திரும்பிச் செல்ல வேண்டும் என்பதும் பற்றி நீங்களே தீர்மானிக்க முடியும்.
- இவ்வாறான தீர்மானங்களை எடுப்பதற்கு உங்களுடைய சொந்த இடம், கிராமம் பற்றிய தேவையான தகவல்களை முன்பே பெறுவதற்கு உங்களுக்கு பூரண உரிமையுண்டு.
- உங்கள் சமூகத்தின் பிரதிநிதிகள் சிலர் உங்களது சொந்த பிரதேசங்களுக்கு முதலில் சென்று நிலைமையைப் பார்த்து வருவதற்கான வாய்ப்பினை நீங்கள் கேட்கலாம். நீங்கள் திரும்பிச் செல்வது தொடர்பாக உங்களுக்கிருக்கும் கேள்விகளை மற்றும் பிரச்சினைகள் குறித்து உங்கள் கிராமத்தின் ஏனைய அங்கத்தவர்களுடனும் உரிய அதிகாரிகளுடனும் கலந்துரையாடலாம்.
- நீங்கள் திரும்பிச் செல்வது தொடர்பான திட்டமிடுதல், ஒழுங்குகளை செய்தல் போன்ற நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்கு உங்களுக்கு முழு உரிமையுள்ளது.

**“பாதுகாப்பாகவும் கௌரவத்துடனும் திரும்பிச் செல்லுதல்” என்றால் என்ன?**

- பாதுகாப்பானது என நீங்கள் கருதும் இடங்களுக்கு மாத்திரமே நீங்கள் திரும்பிச் செல்வதனை உறுதிப்படுத்தும் பொறுப்பு (அரச) அதிகாரிகளுக்கு உண்டு. அவ்வாறான இடங்கள் உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் ஆபத்தினை விளைவிக்கக்கூடிய மிதிவெடிகள், வெடிக்காத குண்டுகள் மற்றும் ெ'ல்கள் போன்றவை இல்லாமல் துப்பரவாக்கப்பட்டிருத்தல் வேண்டும். இத்தகைய பாதுகாப்பு இல்லாத இடங்கள் உங்கள் பிரதேசத்தில் இருப்பின் அவை தெளிவாக அடையாளமிடப்பட்டு இருக்க வேண்டும்.
- பாதுகாப்பாக திருப்பிச் செல்லுதல் என்பது செல்லும் பிரதேசங்களில் நீங்கள் எதுவிதமான அச்சுறுத்தல், பலவந்தப்படுத்தல் மற்றும் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்படக்கூடாது என்பதைக் குறிக்கும். அங்கு சிவில் பொலிஸ் நிர்வாகம் காணப்படல் வேண்டும். ஆட்கடத்தல், முறையற்ற கைது செய்தல் மற்றும் தடுத்து வைத்தல் போன்றவற்றிலிருந்து உங்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் இருத்தல் அவசியம். இராணுவத்திற்கென குறிக்கப்பட்ட பிரதேசங்கள் உங்கள் வீடுகளிலிருந்து பாதுகாப்பான தூரத்தில் இருக்க வேண்டும்.
- நீங்கள் திரும்பிச் செல்லும் பிரதேசங்களில் முழுமையான நடமாடும் சுதந்திரமும், உணவுப் பொருள் கிடைப்பனவும், வாழ்வதற்கு வருமானம் பெறக்கூடிய தொழில் செய்வதற்கான வசதியும் அனுபவிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். நீர்,மலசலகூடம், வைத்தியசாலை மற்றும் பாடசாலைகள் போன்ற அத்தியாவசிய சேவைகள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டீருத்தல் வேண்டும். பிராந்திய மற்றும் பிரதேச அரச அமைப்புக்களிலிருந்து இச்சேவைகளை எதுவிதமான பாரபட்சமுமின்றி பெறக்கூடியதாக இருக்க வேண்டும்.

**வலுக்கட்டாயமாக திரும்பி அனுப்புவதற்கு எதிராக பாதுகாக்கப்படல்**

- உங்களுடைய உயிர்,சுதந்திரம்,மற்றும் சுகாதாரம் பாதிக்கப்படும் அபாயமிருக்கும் இடங்களுக்கு திரும்பிச் செல்லவேண்டும என எதுவிதமான அழுத்தங்களுக்கும் நீங்கள் உட்படுத்தப்படக்கூடாது.
- உங்களுடைய குடும்ப அங்கத்தவர்களிடமிருந்து பிரிந்துசெல்ல நீங்கள் கட்டாயப்படுத்தப்படக்கூடாது.
- சொந்த இடங்களில் நிலவும் சூழ்நிலை பற்றி நீங்கள் அறிந்ததன் அடிப்படையில் உடனடியாக திரும்பிச் செல்லாமல் இருக்க நீங்கள் தீர்மானிக்கலாம். அவ்வாறு நீங்கள் தீர்மானித்தால் சகல தரப்பினரும் உங்கள் முடிவுக்கு மதிப்பளிக்க வேண்டும். நீங்கள் திரும்பிச் செல்லவோ அல்லது தொடர்ந்து தங்கவோ எடுக்கும் தீர்மானத்தை அடிப்படையாக வைத்து அரசு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து உங்களுக்கு கிடைக்கும் உலர் உணவு மற்றும் ஏனைய உதவிகள் பெறுவதற்கான உரிமை மறுக்கப்படமுடியாது.

**தொடர்பு :**

நீங்கள் திரும்பிச் செல்வதா அல்லது தொடர்ந்து தங்கி இருப்பதா என்ற தீர்மானத்தை எடுப்பதற்கு மேலதிக தகவல்கள் தேவைப்படின் கீழ்வரும் முகவரிகளுடன் தொடர்புகொள்ள முடியும்.

| | | | | |
|---|---|---|---|---|
| யு.என்.எச்.சி.ஆர்: | மட்டக்களப்பு அலுவலகம்: | 59/2இ மாமாங்கம் வீதி, மட்டக்களப்பு | தொலைபேசி | (065)-222 7478 |
| | திருகோணமலை அலுவலகம்: | 63 தபால்கநதோர் வீதி, திருகோணமலை | தொலைபேசி | (026)-222 4027 |
| யுனிசெப்: | மட்டக்களப்பு அலுவலகம்: | 31/1, மனிங் றைவ், மட்டக்களப்பு | தொலைபேசி | (065)-222 6479 |
| | திருகோணமலை அலுவலகம்: | 200/1,கஸ்டம்ஸ் வீதி திருகோணமலை | தொலைபேசி | (026)-222 4946 |
| யு.என்.ஓச்சா: | மட்டக்களப்பு அலுவலகம்: | 22, பெயிலி குறுக்கு வீதி, மட்டக்களப்பு | தொலைபேசி | (065)-222 7457 |
| | திருகோணமலை அலுவலகம் | அருணகிரி வீதி, திருகோணமலை- | தொலைபேசி | (026)-222 2355/56 |
| இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு: | மட்டக்களப்பு அலுவலகம்: | 22, சின்னஉப்போடை, மட்டக்களப்பு | தொலைபேசி | (065)-222 5647 |
| | திருகோணமலை அலுவலகம்: | பிரதான வீதி, திருகோணமலை | தொலைபேசி | (026)-222 7074 |